


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.06.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தமிழ்நாடு மாநில மீன்வளக் கூட்டுறவு இணையத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், துணை இயக்குநர் திரு. ஜசக் ஜெயராஜ், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 397/2016 நாள்: 24.06.2016

**காணாமல் போன மற்றும் விபத்தில் மரணமடைந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், காப்புறுதி நிவாரணத்தொகையாக ரூ. 4 இலட்சத்திற்கான காசோலைகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (24.06.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.06.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படுவதுடன், குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் பிப்ரவரி மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 39 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 8 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 60 என மொத்தம் 107 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் அதன் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட உரிய பட்டியல் மீன்துறை ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 01.12.2015 அன்று ஈரான் நாட்டில் கைது செய்யப்பட்ட 31 மீனவர்களும் 03.03.2016 அன்று விடுவிக்கப்பட்டு, சொந்த ஊர் வந்தடைந்துள்ளனர். மேலும் அவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது எனவும், இரயுமன்துறை கிராமத்தில் கடலரிப்பு தடுப்பு சுவர் அமைப்பதற்காக சுமார் ரூ.309.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அரசின் நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும் எனவும், ஏழுதேசம், சின்னத்துறை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்திட ரூ.5.80 கோடியில் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எனவும், திட்டுவிளை குருசடி பேருந்து நிறுத்தத்தில் அவ்வழி செல்லும் சாதாரண நகர பேருந்துகள் நின்று செல்கின்றன. தற்போது நின்று செல்லும் பேருந்துகளின் எல்லா நடைகளின் போதும் முழுமையான பயணி பயன்பாடு இல்லை. எனவே தற்போதைய பேருந்து வசதியே போதுமானது எனவும், இராஜாக்கமங்கலம் துறை அருகில் உள்ள திருமண மண்டபத்தின் பின்புறம் மழைக்காலங்களில் மட்டும் தேங்கும் தண்ணீரை அகற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், புற்றுநோய்கள் பெண்களுக்கான கர்ப்பவாய் புற்றுநோய், மார்பக புற்று நோய்கள் போன்ற தொற்றா நோய்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ மனைகள், அரசு மருத்துவமனை மருத்துவ குழுக்கள் ஆகியவைகளில் பரிசோதனை செய்து., நோயினால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது எனவும், தூத்தூரை சார்ந்த ஆக்னஸம்மாள், றீத்தம்மாள் மற்றும் இராஜாக்கமங்கலம் துறையை சார்ந்த சூசை ஆகியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பெரியவிளை திரு. ஆரோக்கிய ரெகு என்பவர் 03.12.2013 அன்று விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். அன்னாரது மனைவி சுபா -விடம் ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையினையும், கீழமுட்டம், திரு. சகாய ஷெல்டன் என்பவர் 26.12.2014 அன்று பக்ரீன் நாட்டில் மீன்பிடி தொழில் செய்த போது விபத்து ஏற்பட்டு மரணமடைந்தார். அன்னாரது தந்தை திரு. மரியஜேம்ஸ்-டம் ரூ. 2 இலட்சத்திற்கான காசோலையினையும், குளச்சல் திரு. அந்தோணி ராஜ் என்பவர் 19.02.2012 அன்று குளச்சல் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்றபோது, ஆழ்கடலில் விசைப்படகுடன் காணாமல் போனார். அன்னாரது தாய் திருமதி. மெல்கிரேட் மேரி -யிடம் ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையினை என மூன்று குடும்பத்தினருக்கு மீனவர் குழு விபத்து காப்பீட்டு திட்டத்தின்கீழ், காப்புறுதி நிவாரணத்தொகையாக ரூ. 4 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தமிழ்நாடு மாநில மீன்வளக் கூட்டுறவு இணையத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், துணை இயக்குநர் திரு. ஐசக் ஜெயராஜ், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.